
உ
சிவமயம்



ஓய்வு பெற்ற அதிபர்

# அமரர் சின்னத்தம்பி சிற்றம்பலம்

அவர்களின் இறைபதப் பேறுகுறித்த

# நினைவுமலர்

12.10.2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

பண்பிற்கும் பாசத்திற்கும் பிறப்பிடமாய்

கடமை கண்ணியம், கட்டுப்பாடு,

மனிதநேயம் போன்ற சகல

நல்லொழுக்கங்களும் இலக்கணமாய்

திகழ்ந்து வையத்துள் வாழ்வாங்கு

வாழ்ந்து மறைந்திட்ட எம் தெய்வத்தின்

பொன்னடிகளுக்கு இம்மலரினை

சமர்ப்பணம் செய்கின்றோம்.


இங்ஙனம்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



தோற்றம் 1941.11.02

மறைவு 2017.09.12

அமரர்

# சின்னத்தம்பி சிற்றம்பலம்

## திதி நிர்ணய வெண்பா

ஆண்டு ஏவிளம்பி யில் ஆன ஆவணியின்
அபரபக்கச் சப்தமியே சிற்றம்பலம்
ஆசான் ஆகுதில்லைச் சிற்றம்பலத்தான்
அடிசேர்ந்தானென்று செப்பு வாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பஞ்ச தோத்திரப் பாமாலை



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே.

## தேவாரம்

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலு முன்னை மறந்தறியேன்
உன்னாமம் என்னாவில் மறந்தறியேன்
உலந்தார்தலை யிற்பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய்
அலந்தேனடி யேனதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைப்பேன்
ஆண்டநீ அருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி வாயே.

## திருவிசைப்பா

ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம் ஒரு மூன்றும்
திருந்து சாத்துவிகமே ஆக
இந்து வாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங்கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள்
செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

ஆதியாய் நடுவுமாகி அளவு இலா அளவுமாகிச்
சோதியாய் உணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா ஏகம் ஆகிப் பெண்ணுமாய் ஆணும் ஆகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொது நடம் போற்றி போற்றி

## திருப்புகழ்

பக்தியால் யானுன்னைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறென பெருவாழ்வில்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா
வெற்றி வேலாயுதப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறையரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான் மறையறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெய்வத்துதி

### நுணுவில் பிள்ளையார் துதி

தூய தெய்வமென உனைத் துதிசெய்தே
காத்திரமாய் பலகாரியம் ஆற்றிடவே
ஓயாமல் உன் அடி வணங்கி நின்றாரே
நுணுவில் பிள்ளையாரே அணைத்தே அருள்செய்
வாயாலே பேசாது வழிபட்டு நின்றாரே
வாரி அணைத்திடு எம் தலைவனை
மாயாஜாலம் ஏதுமற்ற மாண்பினர் இவர்
மாயமாய் வந்திட்டார் மனமுடன் ஏற்றிடுவாயே!

### அத்துளு அம்மன் துதி

தொடர்வினையைத் துண்டிக்கவல்லானே வித்தகனே
தொழுவார் வினைமுதலே நிமலா
திடமான வாக்களிப்பாய் தெளிந்தமனந் தருவாய்
தேவதேவே பாரில் பாவியேன்
படமுடியா வேதனைகள் பட்டு விட்டேன்
பாவலனே ஏழையினைப் பார்த்திடுவாய்
விடமாட்டாய் என்றுநான் நம்பி வந்தேன்
விநாயகனே பேதையினை ஏற்றருளே

### மித்தில் ஞானவைரவர் துதி

சூலமும் கையுமாய் வைரவா
சூழ்ந்திரு துயர் போக்க மித்தில்தனில்
சாலமும் ஞாலமும் புரிவோனே
சாதுவாம் எம் தந்தை உன்னருகே
சீலமுறு வாழ்வுதனை முடித்திட்டே
சிவன் பாதம் தொட்டுநின்ற
கோலமதை நீயும் அறிவாயே
கோமகனே கொடுத்திடு நல்லருளை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செல்வச்சந்நிதி முருகன் துதி

சீற்றத்துடன் சினம்கொண்டு எழுந்தாயே
தீர்த்துக்கட்டியே சூரன்சிரம் கொய்தாயே
போற்றிப் புகழ்பாடி பொல்லாநிலை தளர்த்திட
புராணநாயகனே புதுயுகம் படைப்பாயே
வேற்றிலா மனத்தினர் ஆற்றிடும் தொண்டுதனை
வேந்தே நீ மறந்திட மாட்டாயே
காற்றிடை சிக்கிய எம் தந்தைக்கு
காவலாய் நின்றிடு கந்தப் பெருமானே!

## வல்லிபுர மாயவன் துதி

பாற்கடலிற் பள்ளி கொள்ளும் பரந்தாமா
பாரில் நல்லவர் வாழவும்
போற்றாத் தீயவர் அழியவும் தர்மம்
தழைக்கவும் யுகந்தோறும் அவதரிப்பாய்
தோற்றாது உயிர்காக்கும் காவலனே மாயவனே
மாற்றமுறாத் துன்பக் கடலிலே
ஏற்பார் இன்றித் தவிக்கும் என்னை
ஏற்றருளே ஆருயிரே ஆரமுதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் சின்னத்தம்பி சிற்றம்பலம் அவர்களின் வாழ்க்கைப் பதிவுகள்

இலங்கைத் தீவின் மூளையெனப் போற்றப்படும் வடமராட்சிப் பிரதேசத்திலுள்ள அத்துளு அம்மன் கோயிலடி என்னும் பகுதியின் உயர்சைவ வேளாண் குடிமக்கள் வாழும் கிராமத்தில் வாழ்ந்துவந்த சின்னத்தம்பி செல்லமுத்து தம்பதிகளின் மகனாக 1941ம் ஆண்டு மார்கழி மாதம் இரண்டாம் திகதி பிறந்தார். அமரர் சிற்றம்பலம் தனது ஆரம்பக்கல்வியை யா/ஞானசாரியார்க் கல்லூரியிலும், இடைநிலைக் கல்வியை யா/விக்கினேஸ்வராக் கல்லூரியிலும் , உயர்தரக் கல்வியை யா/ஹாட்லிக்கல்லூரியிலும், பட்டப்படிப்பினை கண்டி பேராதனைப் பல்கலைக்கழகத்தில் 1965ல் நிறைவு செய்தார். அன்னாரது சந்ததியில் முதல்முதல் பல்கலைக்கழகம் சென்ற பெருமை அவரையே சாரும்.

கல்வி கற்ற காலத்தில் ஆங்கிமொழிப் புலமையையும் விளையாட்டுப் பயிற்சியையும் சிறப்புறச் செய்து வாழ்வின் ஒரு முழு மனிதனாக வாழ்வதற்கான அத்திவாரத்தைப் பெற்றுக் கொண்டார். 1962 - 1965ம் ஆண்டுக் காலப்பகுதியில் பேராதனைப் பல்கலைகழகத்தில் படித்த காலத்தில் மெய்வல்லுனர் போட்டிகளில் கலந்து 200m, 400m ஓட்டங்களில் திறமை காட்டியமையால் University of Peredeniya Athletic Colours பெற்றுள்ளார். அவரை ஊரவர்கள் "சித்தர்" என செல்லமாக அழைக்கலாயினர். தனது தாய் தந்தையரிடம் அளவில்லாத அன்பு கொண்டிருந்ததோடு அவர்களது கடமைகளைச் சரிவரச் செய்து ஊர் மக்களது பாராட்டையும் ஆசியையும் பெற்றுக் கொண்டவர்.

07.09.1966இல் ஆசிரியராக நியமனம் பெற்று குருநாகல் பரகதெனியா முஸ்லீம் மகாவித்தியாலயத்தில் தனது ஆசிரியப் பணியைத் தொடங்கினார். 1969ம் ஆண்டு வைகாசி மாதம் பெற்றோரின் விருப்பத்திற்கிணங்க சின்னையா பொன்னம்மாவின் மகள் புவனேஸ்வரி என்பவரைத் திருமணம் செய்து இல்லறத்தின் பயனாக ஜோதிரவி, மலைமகள், ஜோதிகரன் ஆகிய பிள்ளைகளைச் செல்வங்களாகப் பெற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீரோடும் சிறப்போடும் வாழ்ந்து வந்தார் தனது பிள்ளைகளுக்கான வாழ்க்கைத் துணைகளாக புஸ்பலதா, அசோகன் அகியோரை இணைத்து பேரப்பிள்ளைகளாக சகான், சத்தியேந்திர, சிற்றம்பலம், சானியா. ஆரவி, ஆபிரயா ஆகியோரையும் பெற்றுக் கொண்டார்.

அன்னார் தனது சேவைக்காலத்தில் 1970 தொடக்கம்1983 வரை யா/ஞானசாரியார்க் கல்லூரியில் ஆசிரியராகவும் 1984ம் ஆண்டு அதிபராகி இப்பாடசாலையில் விளையாட்டு மைதானத்திற்காக 03 ஏக்கர் காணியை மித்தில் வயலில் பெற்றுக்கொண்டார். 01.02.1993ல் பதவி உயர்வு பெற்று யா/நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திற்கு கொத்தனி அதிபராக தமது கடமைகளைப் பொறுப்பேற்றார். அக்காலத்தில் மாணவர்களில் ஒருவராக தன்னையும் மாற்றிக்கொண்டு மாணவர்களுக்குத் தேவையான சகல வசதிகளையும் சரிவர நிறைவேற்றினார். கல்வியுடன் விளையாட்டின் அவசியத்தையும் உணர்ந்த சிற்றம்பலம் அதிபர் அவர்கள் விளையாட்டு உபகரணங்களை தனது சொந்தக் காசில் வாங்கிக் கொடுத்ததுடன் மாணவர்கள் மாவட்ட, மாகாணப் போட்டிகளுக்குச் செல்வதற்கான சகல செலவுகளையும் தானே முழு விருப்பத்துடன் பொறுப்பேற்றுக்கொண்டார். இதற்கு இவரது துணைவியாரின் ஆதரவும் கிடைத்தது.

மொத்தமாக முப்பத்தைந்து வருடங்கள் தமது சேவைக்காலமாகக் கொண்டிருந்த சிற்றம்பலம் அதிபர் அர்பணிப்பு, விடாமுயற்சி, அயராத உழைப்பு, தியாகமனப்பான்மை, தனக்கென வாழாது பிறருக்காக வாழ்தல் போன்ற பல நற்பண்புகள் காரணமாக நூற்றுக் கணக்கான நன் மாணாக்கர்களை உருவாக்குவதற்கு பெரும்பங்காற்றியிருந்தார்.

1992ல் கல்வித் திணைக்களம் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் பெண்கள் பரிவினை மூட முற்பட்டபோது அதனை மூடவிடாது தடுத்துக்கொண்டார். பாடசாலைக் காலத்தில் மாணவர்களது அறிவைப் பெருக்கி பல பொறியியலாளர்கள், வைத்தியர்கள், கணித. விஞ்ஞானப் பட்டதாரிகள் பலரை உருவாக்குவதில் பெரும்பங்காற்றினார்.

சிறுவயது முதலே சுறுசுறுப்பாக ஓய்வின்றி இயங்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்றம்பலம் அதிபர் 2001ல் ஓய்வு பெற்றாலும் யா/ஞானசாரியார்க் கல்லூரியின் வளர்ச்சிக்காவும், நுணுவில் பிள்ளையார் கோயில், ஞானவைரவர் கோயில் ஆகிய கோவில்களின் நிர்வாக நடவடிக்கைகளிலும் பெரும்பங்காற்றினார். மரம் நாட்டுவதில் ஆர்வம் கொண்ட சிற்றம்பலம் அதிபர் அவர்கள் விளையாட்டு மைதானம், கோவில்கள் அனைத்திலும் நிழல் தரும் பல மரங்களை நாட்டி அவற்றிற்கு நீர் ஊற்றி வளர்த்து இன்று பெருமரங்களாக வளர்ந்து நிற்கின்றது. ஞானாசாரியார்க்கல்லூரியின் பழைய மாணவ சங்கத்தின் தலைவராக இருந்து பல வெற்றிகரமான அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டிருந்தார். நெல்லியடி ம.ம.வித்தியாலயத்தின் விளையாட்டு மைதான மரங்கள் பல இவர் பணிசாற்றும். தென்மராட்சி மக்கள் இடம் பெயர்ந்த நேரத்தில் சாவகச்சேரி இந்துக்கல்லூரி இயங்குவதற்கு இடவசதி அளித்து அவர்களை அன்போடு ஆதரித்தார்.

இவரது நிர்வாகப்பணி. அர்ப்பணிப்பு என்பவற்றின் சிறப்பின் காரணமாக இவரால் உருவாக்கப்பட்ட மாணவராக இவர் மிக மரியாதையையும் பேரன்பினையும் வைத்திருந்ததனை அவரது அரசடி நிகழ்வுகளில் இருந்து அறிய முடிகின்றது. அமரர் சின்னத்தம்பி சிற்றபம்பலம் இறைபதம் அடைந்த செய்திகேட்ட உலகெங்கும் இருக்கும் அவரது மாணவர்கள் இன்ரனெற் மூலம் தமது சொல்லாக்கங்களயையும் அனுதாபங்களயையும் தெரிவித்தமை அவரது சேவையின் சிறப்பினைக் காட்டுகின்றது.

உயர்ந்த தோற்றமும் அஞ்சா நெஞ்சமும் நேர்மையான எண்ணமும் கொண்டிருந்த சிற்றம்பலம் அதிபர் நோய்த்தாக்கத்திற்கு உள்ளாகி 11.09.2017ம் திகதி யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு 12.09.2017ம் திகதி இறைபதம் அடைந்தார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
11 - 11 - 1941

மறைவு
12 - 09 - 2017

## அமரர் சின்னத்தம்பி சிற்றம்பலம்

(முன்னைநாள் அதிபர்)

(முன்னைநாள் தலைவர், செயலாளர், மருதடி ஞானவைரவர் ஆலயம்)

இரண்டு தசாப்தங்கள் செயலாளராய்
மூன்று வருடங்கள் தலைவராய்
எம்மாலயத்திற் கோர் போசகனாய்
ஆற்றிட்ட பணிகளோ ஆயிரமாயிரமாய்

யுத்தத்தின் கோரமான காலத்தில்
தன்னந்தனியாக நீர் செய்த பணிகளை
ஞானவைரவரின் பிள்ளைகள் நாம்
நித்திலம் உள்ளவரை நினைந்திருப்போம்

காலங்காலமாக நீர் கைதொழுத
வைரவப் பெருமானின் பாதங்களில்
நின் ஆத்மா சாந்தியடையுமென்ற
நம்பிக்கையில் எமக்கென்றும் ஐயமில்லை.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கெடுப்பதுடன்
அன்னாரின் ஆத்மா எல்லாம்வல்ல மருதடி ஞானவைரவப் பெருமானின் பாதங்களில்
சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

பரிபாலனசபை, மருதடி ஞானவைரவர் ஆலயம்,
மித்திலக்கரை, கரவெட்டி.

16.09.2017

தமிழ்ப்பூங்கா - 021 2264014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



மலர்வு
1941 - 11 - 11

உதிர்வு
2017 - 09 - 12

அமரர்

## சின்னத்தம்பி சிற்றம்பலம்

கண்கள் கலங்குகிறதே காற்று வீச மறுக்கிறதே
உம் மறைவதனை எண்ணி - எம் நெஞ்சம்
வெடித்து விடும் போல் இருக்கிறதே
நேற்றுவரை வாழ்ந்த வாழ்க்கை - இன்று
யாரை விட்டு போனதேனோ!
கதறி அழும் உம் உறவுகளுக்கு
யார் இனி ஆறுதல் சொல்வார்கள்
கவலைகள் தீர கண்திறந்து பாராயோ?

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆன்மா சாந்திபெற இறைவனை வேண்டுகிறோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பிரிவால் துயருறும்

சி.கார்த்தீபன், நிறோஸ், பிரணவன்,
ஜனார்த்தனன், கோகுலன், ஜெயராம்,
சசி,ராஜ்

N.M.N.school 2004 O/L



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிநீர் சொரிகின்றோம்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 02 . 11 . 1941 | 12 . 09 . 2017 |

யா/நெல்லியடி மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபரும்,
நண்பன் ஜோதிகரன் அவர்களின் பாசமிகு தந்தையாரும்

## அமரர். சின்னத்தம்பி சிற்றம்பலம்

அன்பின் திருவுருவாய் அவனியிலே – பிறந்திட்டு
பண்பின் சிகரமாய் பாரினிலே வாழ்ந்திட்டு
வாழ்வின் இலக்கணமாய் புத்திரப் – பேற்றினை
பெற்று தம் வாழ்வதனில் தனக்கென தனித்துவம்
படைத்திட்டு வாழ்ந்துவரும் – உங்கள் வாழ்வதனில்
வந்திட்டாள் காலனவள்
ஆறுவே ஆறாது எம்நெஞ்சம்
மறைந்தவர் வருவாரோ எனஎண்ணி
மனதார தேற்றுகின்றோம் எம் நெஞ்சினை என்றும்
உங்கள் நாமம் இதயத்தில் நீங்காமல் நிலைத்துமே நிற்கும் என்றும்!

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

99 – A/L வர்த்தகப் பிரிவு மாணவர்கள் (99.com)
யா/ நெல்லியடி மத்திய கல்லூரி


16.09.2017

மின்னல் பதிப்பகம் - பத்தாரிச்சந்தி, மீசாலை 021-2060495



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் :
1941.11.11

மறைவு :
2017.09.12

அமரர்

## சின்னத்தம்பி சிற்றம்பலம்

(ஓய்வு பெற்ற அதிபர் நெல்லியடி மத்தி தேசிய பாடசாலை)


அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு
மிகவும் மனவேதனை அடைகின்றோம்.
அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

2000 ஆண்டு
கணிதப்பிரிவு மாணவர்கள்
யா/நெல்லியடி மத்திய கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



மலர்வு
1941 - 11 - 11

உதிர்வு
2017 - 09 - 12

நெல்லியடி மத்தி தேசிய பாடசாலை முன்னாள் அதிபர்

அமரர்

## சின்னத்தம்பி சிற்றம்பலம்

கண்கள் கலங்குகிறதே காற்று வீச மறுக்கிறதே
உம் மறைவுதனை எண்ணி - எம் நெஞ்சம்
வெடித்து விடும் போல் இருக்கிறதே
நேற்றுவரை வாழ்ந்த வாழ்க்கை - இன்று
பாரை விட்டு போனதேனோ!
கதறி அழும் உம் உறவுகளுக்கு
யார் இனி ஆறுதல் சொல்வார்கள்
கவலைகள் தீர கண்திறந்து பாராயோ?

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆன்மா சாந்திபெற இறைவனை வேண்டுகிறோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பிரிவால் துயருறும்


**சி.கார்த்தீபன், நிறோஸ், பிரணவன்,**
**ஜனார்த்தனன், க.கார்த்தீபன், ஜெயராம், சசி**
**2004 O/L**

மரகதம் பதிப்பகம்-நெல்லியடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 02 ✠ 11 ✠ 1941 | 12 ✠ 09 ✠ 2017 |

## அமரர் சின்னத்தம்பி சிற்றம்பலம் அவர்கள்

(முன்னாள் அதிபர். நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்)

*அணைத்தகைகள் இழந்த அபலைகள் ஆனோம் - இரண்டாயிரமாம் ஆண்டுகளில் குடாநாட்டுக்குள் அகதிகளாய் நாங்கள் அலைந்த நாட்களில் - சாவகச்சேரி இந்துக்கல்லூரி சாய்வதற்கு ஒரேஒரு மடியாக திகழ்ந்தது நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் - அணைத்தீர்கள் ஆறுதலளித்தீர்கள் - எமக்காக அமரர் தனக்கிருந்த மட்டுபடுத்தப்பட்ட வளங்களினூடும் - அவரது மட்டற்ற திறன்களினூடும் - நான்கு பாடசாலைகளுக்கு சமனான மாணவர்கள் ஆசிரியர்களைக் கொண்டு நகர்த்திய சாமர்த்தியவான் - ஏதிலியாகி அலைந்த அந்த நாட்களில் - சொந்த வீடுவாசல் நிலம் இல்லை என உணர்ந்த எங்களுக்கு - பாடசாலை இல்லை என்ற உணர்வு தோன்றிடவில்லை - நின்செயலால் அன்று மிகவும் ஆழ்மனதில் பதிந்தவைகள் - காலைப் பாடசாலைகள் ஆயினும் - மாலைப் பாடசாலைகள் ஆயினும் - மாணவரது அடிப்படை வசதிகள் அனைத்தையும் - அமரரின் முகாமைத்துவத்திறனால் - முழுதாய் நாம் பயன் பெற்றோம்.*

*கல்விக்காய் கரம் கொடுத்த பெருந்தகையினன் - தங்களிடம் பட்டகடன் தீர்க்க தருணமில்லை - தகுதியில்லை எமக்கு - இம்மையைத் தாண்டி விட்டீர்கள் ஐயா! மறுமையிலும் மறவோம் நின்பணி.*

**ஐயாவின் ஆத்மா சாந்தியுற - அமைதியிழந்த**
**உறவுகள் ஆறுதலுற - அடிபணிந்து பிரார்த்திக்கின்றோம்.**
**ஆறாத்துயரில் அரவணைத்த கைகளை இழந்த அபலைகளாக**

**யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரிச் சமூகம்**

திருக்கணித பதிப்பகம் – சாவகச்சேரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுக்குத் தளமிட்ட உத்தமன்

மண்ணில் 1941 - 11 - 11



விண்ணில் 2017 - 09 - 12

## அமரர் சின்னத்தம்பி சிற்றம்பலம்

(முன்னைநாள் அதிபர். யா/ஞானசாரியார் கல்லூரி)

அன்பின் இலச்சினையே அறிவின் இலக்கணமே
பண்பின் பிறப்பிடமே பாசமிகு தோழமையே
கடமையின் காவியமே கண்ணியத் திருவுருவே
காலனடி சென்றாலும் காவியமாய் நிலைப்பாய்.

கல்விப் புலத்திலே ஆசானாய்த் தடமிட்டு
கலங்கரை விளக்காய் மாணவர்க்கு வழிகாட்டி
அதிபராய் உயர்ந்து அறிவுரைகள் பலகூறி
ஆன்றோனாய்த் திகழ்ந்தாய் சாந்தி காண்பாய்!

அஞ்சாமை, நேர்மை, அறிவுடமை கொண்டவரே
அகதியாய் வந்தோரை வாழ்வித்த கலைமகனே
பந்த, பாசமேதுமின்றிப் பழுதறாச் சேவையீந்து
எந்தையடி எய்துற்றாய் சாந்தி காண்பாய்!

காலத்தால் அழியாத சேவை செய்த
காரணத்தால் என்றும் நிலைத்திடுவாய்
வானத்து நாயகரும் வாழ்த்தி வரவேற்க
நாதனடி நாடினையோ சாந்தி காண்பாய்

மலைவந்து மோதிடினும் மலங்கா நெஞ்சம்
இமயம் போலுயர்ந்த இதயக் கோயில்
சமயம் பார்த்தெமக் குதவுமுள்ளம்
சரித்திரமாய் வாழ்வாய் சாகமாட்டாய்.

கிழவிதோட்டம்,
கரவெட்டி கிழக்கு.
16.09.2017

அமரர் வீரகத்தி சிதம்பரப்பிள்ளை சார்பாக,
(பிரபல சோதிடர்), இளைப்பாறிய ஆசிரியர்
யா/ஞானசாரியார் கல்லூரி,
குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மண்ணில் 11 11 1941



விண்ணில் 12 09 2017

எமது பாடசாலையின் முன்னைநாள் ஆசிரியரும்,
அதிபரும், பழைய மாணவர் சங்கத் தலைவருமான

## அமரர் சின்னத்தம்பி சிற்றம்பலம்

காலைவேளைதனில் கதிகலங்க வைத்த சேதி,
கருமவீரன் உயிரைக் காலனவன் கவர்ந்து விட்டான்
கலங்கரை விளக்காகக் காலமெலாம் கடமையாற்றியே
கணக்கற்ற உள்ளங்களில் உறைந்திருந்த கண்ணியவான்

என்றென்றும் எம்முடனே எண்ணற்ற காலங்கள்
ஏற்றமிகு கருத்துக்கள் கூறிடுவீர் என்று நாம்
எதிர்பார்த்திருக்க ஏமாற்றிச் சென்றதேனோ?
எல்லாமே விதியென்போம், வேறு வழியின்றி

சீர்மிகு சீராளன் சிற்றம்பலம் சேர்
சிரத்தையுடன் ஆற்றிநின்ற சிறப்பான சேவைகள்
சிந்தையெங்கும் நிறைந்திடவே – எம்
சிரம் தாழ்கின்றது அவர் பாதங்களில்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பாடசாலைச் சமூகம்
யா/ஞானசாரியர் கல்லூரி, கரவெட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மண்ணில்
1941
-
11
-
11



விண்ணில்
2017
-
09
-
12

## அமரர் சின்னத்தம்பி சிற்றம்பலம்

(முன்னைநாள் அதிபர்)

(முன்னைநாள் தலைவர், யா/ஞானசாரியார் கல்லூரி பழைய மாணவர் சங்கம்)

வீழ்ந்திருந்த சங்கத்தை வீறுகொண்டு எழவைத்தீர்
பழைய மாணவரை புலத்திலும் நிலத்திலும் ஒன்றிணைத்தீர்
பாடசாலையின் தேவைகளை பட்டியலிட்டு அறிவித்தீர்
தேக்கமேதுமில்லாமல் ஒவ்வொன்றாய் செய்வித்தீர்.

மாணவனாய், ஆசிரியனாய், அதிபராய், பழைய மாணவத் தலைவனாய்
எம் பாடசாலைக்கு செய்த சேவைகள் கணக்கிடமுடியுமோ
பாடசாலைக்கு காணி பெற்ற கதைகளும் கட்டிடம் அமைத்த கதைகளும்
காலம் காலமாய் பேசிமுடித்தாலும் முடிந்துதான் போகுமோ.

மைதானத்தில் நீங்கள் வைத்த மரங்கள் மட்டும் போதாதா
இத்தரணியுள்ளவரை உங்கள் நாமம் எடுத்துரைக்க
சிற்றம்பலம் என்ற சிவனின் மறுபெயரே
ஞானாசாரியாரிற்கு சிவனாயிருந்ததனை யார்தான் மறுப்பரோ.

**அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது இரங்கலைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.**


பழைய மாணவர் சங்கம்
யா/ஞானசாரியார் கல்லூரி, கரவெட்டி.

16.09.2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் சின்னத்தம்பி சிற்றம்பலம் அவர்கட்கு
## கரவெட்டி பிரதேச பகிரங்க சேவை ஓய்வூதியர்
## நம்பிக்கை நிதியத்தினரின் மனம் நெகிழும் அஞ்சலி



தோற்றம் :
**1941.11.11**

மறைவு :
**2017.09.12**

(ஓய்வு பெற்ற அதிபர் ஞானசாரியார் கல்லூரி நெல்லியடி மத்தி தேசிய பாடசாலை)

அமரர்

# சின்னத்தம்பி சிற்றம்பலம்

(கோவிற்சந்தையடி, கட்டைவேலி, கரவெட்டி)

அமரர் அவர்களின் மரணம் எமது நிதியத்தினரின் பேரிழப்பாகும் வடமராட்சியின் பிரபலமான கல்லூரியான நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தின் ஓய்வு பெற்ற அதிபராக இருந்து நிலைத்து நிற்கக்கூடிய பல நடவடிக்கைகளை அவர் மேற்கொண்டிருந்தார். திறமையான ஒரு விளையாட்டு வீரராக தன்னை வெளிப்படுத்தியிருந்தார். இந்நிதியத்தின் ஆரம்ப கால உறுப்பினராக இருந்து பலவழிகளிலும் ஒத்துழைப்பை நல்கியிருந்தார். எமது சங்கத்திற்கு தகுந்த பல ஆலோசனைகளையும் அவ்வப்போது வழங்கி வந்ததை நாம் நினைவு கூருகின்றோம். அமரரின் இழப்பு துயரம் நிறைந்தது மறக்கப்பட முடியாத ஒருவர்.

எமது மனம் நெகிழும் அஞ்சலியை அவருடைய குடும்பத்தினர்க்கும் ஏனையோருக்கும் சமர்ப்பிக்கின்றோம்.

கரவெட்டிப் பிரதேச
பகிரங்க சேவை ஓய்வூதியர்
நம்பிக்கை நிதியத்தினர்.


பிரதேச செயலகம்,
கரவெட்டி.
16.09.2017

மருதம் பதிப்பகம்-நெல்லியடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
11.11.1941

மறைவு
12.09.2017

## சின்னத்தம்பி சிற்றம்பலம்

அன்பும் பண்பும் கொண்டவர்
ஆற்றல் அதிகம் உள்ளவர்
இன்தாய் என்றும் கதைப்பவர்
ஈடிணையற்ற சேவைகள்
செய்தவர்
உள்ளத் தூய்மை உள்ளவர்
ஊருக்காக உழைத்தவர்
என்றும் மறவோம்
ஏங்கித் தினம் அழுகின்றோம்.

அன்பின் திருவுருவாய், பண்பின் உறைவிடமாய்
அன்புமக்களுடனும் அரவணைப்புடனும் நல்லறம்
என்னும் பாதையில் இனிது வாழ்ந்துகாட்டி
அமரராகி ஆண்டவன் காலடி சென்றடைந்த
அன்னாரின் ஆன்மா சாந்திபெறப்
பிரார்த்திக்கின்றோம்.

sahan farm boys


மருதம் பதிப்பகம் - நெல்லியடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவரை நேசித்த மாமனிதம்

மண்ணில்
11
-
11
-
1941



விண்ணில்
12
-
09
-
2017

## அமரர் சி. சிற்றம்பலம்

கரணவாயன்னை யீந்த கல்வியின் மகுடமே
கல்விக் கதிரீந்து எமை வழிகாட்டி வாழவைத்த
எனதருமை ஆசானே எழுத்தறிவித்தவனே
எமன் கையிற் சிக்கினையோ சாந்தி! சாந்தி!

ஆசானாய்ப் பல பள்ளி அலங்கரித்துப்
பாசமொடு பிள்ளைகளை நேசித்த பெருமகனே
போதனையாற் சாதனைகள் புரிந்த பிதாமகனே
சாதனைகள் பல செய்தாய் சாந்தி காண்பாய்.

ஏழ்மையிற் பிறந்தமையால் ஏழைகளை நேசித்தாய்
எவருக்கும் அஞ்சாத முதல்வனாய் பணி செய்தாய்
ஏதிலியாய் இடம்பெயர்ந்த மாணவரின் பிதாவானாய்
ஏங்குகிறோம் உனையிழந்து சாந்தி காண்பாய்.

யுத்த மேகங்கள் கருக்கொண்ட காலமதில்
கண்ணான கல்விதனைக் கட்டிக் காத்தாய்
எத்திசையும் உன்நாமம் பேசக் கேட்டோம்
எமையெலாம் ஏங்கவிட்டு எங்கு சென்றாய்.

முதல்வரில் முதல்வனாய் எம்மண்ணை அலங்கரித்தாய்
முத்தான சேவையினால் முழுமதியாய் நீ மிளிர்ந்தாய்
பொதுவுடமைச் சிந்தனையைச் செயலதில் காட்டும்
புரவலனாய் வாழ்ந்த் பெருமகனே எங்கு சென்றாய்.

இனபேதம், குலபேதம், தனபேத மேதுமின்றி
எம்மவரை மானிடராய் மதித்த மகாகுருவே
பசுமைமிகு சூழலினைக் காத்த பரமகனே
உனையெண்ணி எம்விழிகள் கலங்குதையா.

வ. செல்வராசா (ஓய்வுநிலை மாகாணக் கல்விப் பணிப்பாளர், கரவெட்டி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாக் காவியன்

மண்ணில்
11 - 11 - 1941



விண்ணில்
12 - 09 - 2017

## அமரர் சின்னத்தம்பி சிற்றம்பலம்

*பல்கலையிற் கலைமாணிப் பட்ட மேற்று*
*பள்ளியிலே ஆசானாய் அடிபதித்து*
*பண்பிற்கோர் இலக்கணமாய் பவனி வந்த*
*எமதருமை ஆசானே எங்கு சென்றாய்*

*நிமிர்ந்த நடையொடு நேர்கொண்ட பார்வையும்*
*தெளிந்த சிந்தையும் தெளிவான கொள்கையும்*
*கனிந்த பண்பொடு கலங்கா நெஞ்சமும்*
*நிறைந்த மனிதமே நித்தியத்தி லுறைந்தனையோ*

*பதவியால் பெருமை கொளாப் பண்பாளனே*
*பணத்துக்கு விலையாகாப் பரமகனே*
*நினைத்ததை முடித்திடும் நித்திலமே*
*நித்தியத்தில் உறங்கினையோ சாந்தி சாந்தி.*

*சாவுக்கு மஞ்சாச் சரித்திர நாயகனே*
*சமூகத்தை வழிகாட்டி வளர்த்த பெருமகனே*
*ஊரெல்லாம் உரிமையொடு உறவாடி வாழ்ந்து*
*பார் சிறக்கும் பணிசெய்து பரமனடி நாடினையோ.*

**க. கந்தசாமி**
சாலை முகாமையாளர்,
இலங்கை போக்குவரத்துச்சபை, பருத்தித்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய தெய்வமே இறைவனடி சென்றனையோ!

மலர்வு

11

11

1941



உதிர்வு

12

09

2017

## அமரர் சீ. சிற்றம்பலம்

ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்றில்
ஆசானாய் உயர்வகுப்பிற் சங்கமித்து
அரிய பல போதனைகள் புரிந்து எமை
வாழ வைத்த பெருமகனே எங்கு சென்றாய்!

நன்னூலார் காட்டும் நல்லாசானாய்
பள்ளியிலே பாங்காகக் கற்பித்த பிதாமகனே
நண்பனாய், மந்திரியாய் நமையெல்லாம் வாழவைத்து
நாதனடி நாடினையோ சாந்தி காண்பாய்!

நேர்மைக்கு இலக்கணமாய் மண்ணில் வாழ்ந்தாய்
நேருக்கு நேர் எதையும் கூறும் பாங்காய்
பாரினிலே உன்போல் எவருமில்லை
பாவி யமன் பறித்தானோ உன்னுயிரை!

பதவிக்காய்ப் பல்லிளித்துப் பணிய மாட்டாய்
பட்டென்று உண்மைதனை உடைத்திடுவாய்
இதயத்திறுண்மைகளை எடுத்தியம்பும்
எங்க ளன்பு ஆசானே எங்கு சென்றாய்.

ஆயுத கலாசாரத்துக் கடங்கா நெஞ்சன்
ஆதிசிவன் தோன்றிடினும் அஞ்சமாமாட்டாய்
நேர்வழியே யென்வழி யென்றுரக்கக் கூறும்
நீதிநெறி வாழ்ந்திட்டாய் சாந்தி காண்பாய்.


அம்சன் ஒளியக வட்டம், நெல்லியடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

பிறப்பு
02
-
11
-
1941



இறப்பு
12
-
09
-
2017

அமரர்

## சின்னத்தம்பி - சிற்றம்பலம்

( ஓய்வு நிலை அதிபர், ஹெல்லிபொல மத்திய கல்லூரி )

அப்பாவைப் போலவே அருகிருந்து
அன்போடும் பண்போடும் அறிவூட்டி
எப்போதும் எமது முன்னேற்றம் பற்றி
விசாரித்து ஊக்கு வித்த ஆசானே!
தமிழையும் செய்தலையும் கற்றுக் காட்டி
வழிகாட்டியாய் நீதி நெறி காட்டினீரே!

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கும், உற்றார்,உறவினர்களுக்கும் எமது கண்ணீர் அஞ்சலியை
காணிக்கையாக்குவதோடு
எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.
ஓம்சாந்தி! சாந்தி! சாந்தி!

உங்கள் பிரிவால் துயருற்றிருக்கும் மாணவர்கள்

அல்வாய்
16.09.2017

அ.மயூரக்கன்.
அ.வசந்தன்.
வி.கிரிதரன்.

/கிரகன் கணனிப்பதிப்பகம்-0770871814




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எமது குடும்பத்தலைவர் அவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட வேளை சிகிச்சை அளித்த வைத்திய நிபுணர்கள் உத்தியோகத்தர்கள், மரணச் செய்தி கேட்டதும் ஓடி வந்து உடன் உதவிய நண்பர்கள் உறவினர்கள், மலர்வளையம் வைத்தும் கண்ணீர் அஞ்சலிகள் மூலமும் அனுதாபம் தெரிவத்த, சாவகச்சேரி இந்துக் கல்லூரிச் சமூகத்தினர், நெல்லியடி மத்திய கல்லூரிச் சமூகத்தினர், ஞானாசாரியர் கல்லூரிச் சமூகத்தினர், ஆசிரிய நண்பர்கள், அவரிடம் கல்வி கற்று இணையம், மின்னஞ்சல், முகநூல், தொலைபேசி மூலம் இரங்கல் தெரிவித்தும், தமது பதிவகளைப் பகிர்ந்து மாணவ பரம்பரைக்கும், இறுதி நிகழ்வின் போது அஞ்சலி உரை நிகழ்த்திய பெருந்தகைகளிற்கும் அவர் காலத்தில் கல்வி கற்பித்த ஆசிரியர்கள் அதிபர்களிற்கும் பல்வேறு வழிகளிலும் ஒத்தாசை புரிந்த ஞானம்ஸ் விளையாட்டுக் கழகத்தினருக்கும் அவரது இறுதி நிகழ்வில் உடனிருந்து உதவிய அயலவர் உறவினர் புலம் பெயர் உறவுகள் அனைவருக்கும் அமரர் சின்னத்தம்பி சிற்றம்பலம் அவர்களின் குடும்பத்தினர் கனத்த இதயங்களுடன் நன்றிகளை நவில்கிறோம்.

குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்?
அது வீணாகுவதற்கு
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகிறது.



இந்த மாற்றம் உலக நியதியாகும்.
பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்



தமிழ்ப்பூங்கா , நெல்லியடி – 021 226 4014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org